## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் அறிவிப்பு - 31 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளி மற்றும் ஒரு வனத்துறை உண்டி உறைவிடப் பள்ளி ஆகியவற்றில் 65 புதிய கழிப்பறைகள் புதிதாகக் கட்டுதல் - நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2)துறை**

**அரசாணை (நிலை) எண்: 98** **நாள் : 30.11.2021.**

திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம், கார்த்திகை
செவ்வாய் 14 –ஆம் நாள்.
படிக்கப்பட்டது:-

பழங்குடியினர் நலம் இயக்குநரின் ந.க. எண். பமே/ஈ1/ 10550/2021, நாள்.11.10.2021. பெறப்பட்ட நாள். 20.11.2021.

*****

ஆணை:

08.09.2021 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021-2022ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு கூட்டத்தொடரில் இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்.

**"பழங்குடியினர் நலத்துறையின் கீழ் கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி, தருமபுரி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய 7 மாவட்டங்களில் இயங்கும் 31 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 65 கழிப்பறைகள் தலா ரூ.7.00 இலட்சம் வீதம் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படும்".**

2. மேற்காணும் அறிவிப்பினைத் தொடர்ந்து, பழங்குடியினர் நல இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 7 மாவட்டங்களில் செயல்படும் 32 பழங்குடியினர் நல உண்டி உறைவிட பள்ளிகளில் பயிலும் பழங்குடியின மாணவ / மாணவியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 14 தொடக்கப்பள்ளிகளுக்கு 21 கழிப்பறைகளும், 5 நடுநிலைப் பள்ளிகளுக்கு 15 கழிப்பறைகளும், 7 உயர்நிலைப்பள்ளிகளுக்கு 9 கழிப்பறைகளும், 5 மேல்நிலைப்பள்ளிகளுக்கு 16 கழிப்பறைகளும் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தில் செயல்படும் ஒரு வனத்துறை மேல்நிலைப் பள்ளிக்கு 4 கழிப்பறைகள் என ஆக மொத்தம் 65 கழிப்பறைகள் கட்டுவதற்கு, ஒரு கழிப்பறைக்கு தலா ரூ.7.00 இலட்சம் வீதம் 65 கழிப்பறைகளுக்கு ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் 32 பள்ளிகளுக்கு கழிப்பறைகள் புதியதாக கட்டுவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டது என்றும், ஆனால் தாட்கோ தற்பொழுது வழங்கியுள்ள திட்ட மதிப்பீட்டில் பொதுப் பணித்துறை விலைப்பட்டியல் மற்றும் விலைவாசி உயர்வு காரணமாக ஒரு கழிப்பறைக்கு ரூ.7.50 இலட்சம் வீதம் 65 கழிப்பறைகளுக்கு ரூ.4.875 கோடி கோரப்பட்டுள்ளது என்றும் எனவே, ஒரு கழிப்பறைக்கு ரூ.7.50 இலட்சம் வீதம் 65 கழிப்பறைகள் ரூ.4.875 கோடி மதிப்பீட்டில் கட்ட நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பழங்குடியினர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின், மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் அறிவிப்பிற்கிணங்க பழங்குடியினர் நலத்துறையின் கீழ் கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி, தருமபுரி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய 7 மாவட்டங்களில் இயங்கும் 31 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப்பள்ளிகளில் 61 கழிப்பறைகள் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தில் செயல்படும் ஒரு வனத்துறை மேல்நிலைப் பள்ளிக்கு 4 கழிப்பறைகள் ஆக 65 கழிப்பறைகளை கீழ்க்கண்டவாறு ரூ.4,85,49,507/- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்தைந்து இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து ஐநூற்று ஏழு மட்டும்) மதிப்பில் தாட்கோவின் மூலம் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்காக, பழங்குடியினர் நல இயக்குநருக்கு, நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| 65 கழிப்பறைகள் x ரூ.7,50,000/- | ரூ.4,87,50,000/- |
| **கழிக்க : Unforeseen items**<br>65 கழிப்பறைகள் x ரூ.3,084.50/- | ரூ. 2,00,493/- |
| **மொத்தம்** | ரூ.4,85,49,507/- |

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிக்கான செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4225 - ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு -02 பழங்குடியினர் நலன் - 277 கல்வி மாநிலச் செலவினங்கள் KA - பழங்குடியினர் தங்கிப் பயிலும் அரசு பள்ளிகள் மற்றும் விடுதிகள் கட்டுதலும் பழுதுபார்த்தலும் - 416 பெரும் பணிகள்- 01 பெரும் பணிகள்.
(IFHRMS த.தொ.கு. 4225 02 277 KA 41601) "

5. மேலே குறிப்பிட்டுள்ள கட்டுமானப் பணி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை நிறுவனத்தால் உரிய ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர் தாட்கோவுடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படியும், மேலும், கழிவறைகளின் கட்டுமானப் பணியினை உடனடியாக மேற்கொண்டு நடப்பு நிதியாண்டிலேயே முடித்துவிட்டு முடிக்கப்பட்ட அறிக்கையினை நடப்பு நிதியாண்டு முடிவிற்குள் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும், பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண்.53113, நாள்.29.11.2021-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை -600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை -600 009/18.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி, தருமபுரி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் நீலகிரி.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி, தருமபுரி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் நீலகிரி.
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி, தருமபுரி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் நீலகிரி.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -600 009.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -600 009.
நிதி(ஆதி(ம)பந)துறை, சென்னை -600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை முதன்மை செயலாளரின் தனிச் செயலர், சென்னை -600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.7/ ஆதிந.5 ) துறை, சென்னை -600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ரா. தங்கம்
1-12-2021
பிரிவு அலுவலர்.

**இணைப்பு**

**அரசாணை (நிலை) எண். 98, ஆதி(ம)பந(ஆதிந2(1)) துறை, நாள். 30.11.2021**

**கழிப்பறைகள் கட்டப்பட வேண்டிய பழங்குடியினர் நல வனத்துறை உண்டி உறைவிடப் பள்ளிகள் விவரம்**

| வ எண் | மாவட்டம் | பள்ளியின் பெயர் | தேவைப்படும் கழிப்பறைகள் |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் (2) | மாவுத்தம்பதி உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 |
| | | சீங்குபதி உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 |
| | | **மொத்தம்** | **2** |
| 2 | தர்மபுரி (10) | சித்தேரி அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி | 2 |
| | | நரிப்பள்ளி அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி | 4 |
| | | கலசப்பாடி உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி | 1 |
| | | பேரேரி உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 |
| | | நொச்சிக்குட்டை உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 |
| | | அரசநத்தம் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி | 1 |
| | | வாச்சாத்தி உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 2 |
| | | கோவிலூர்உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 2 |
| | | மலைத்தாங்கி உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 2 |
| | | மல்லூத்துஉண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 |
| | | **மொத்தம்** | **19** |

| | | | |
|---|---|---|---|
| 3 | ஈரோடு (2) | ஆசனூர் உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 |
| | | பர்கூர் உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 |
| | | **மொத்தம்** | **2** |
| 4 | கள்ளக்குறிச்சி (11) | கொட்டப்புத்தூர் உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி | 4 |
| | | இன்னாடு உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி | 4 |
| | | பெரும்பூர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 |
| | | எழுத்தூர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 |
| | | சேரப்பட்டு உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 2 |
| | | தேக்கப்பட்டு உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 2 |
| | | கண்ணூர் உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 2 |
| | | கீழ்நிலவூர் உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 2 |
| | | பொட்டியம் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 |
| | | சங்கராபுரம் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 |
| | | **மொத்தம்** | **24** |
| 5 | தென்காசி | தலையணை உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 |
| | | **மொத்தம்** | **1** |

| | | | |
|---|---|---|---|
| 6 | திருப்பத்தூர் | ஜவ்வாது மலை உண்டி உறைவிட வனத்துறை மேல்நிலைப்பள்ளி | 4 |
| | | மொத்தம் | 4 |
| 7 | நீலகிரி | ஏலமன்னா உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி | 1 |
| | | முக்கட்டி உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி | 2 |
| | | தேவாலா உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி | 4 |
| | | பொக்காபுரம் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி | 4 |
| | | மொத்தம் | 11 |
| 8 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை அரசு உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி | 2 |
| | | மொத்தம் | 2 |
| | | நிகர மொத்தம் | 65 |

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

ஞா. தங்கம்
1.12.2021
பிரிவு அலுவலர்.